(எ) அந்த மாதிரி வேலே நிறுத்தங்கள் மீண்டும் நிகழாவண்ணம் தடுக்க அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லே.

(இ), (உ) & (எ) எழாது.

Assistance from World Bank

*36 Q.—THIRU V. VENGA: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the assistance sought from the World Bank for the Slum Clearance Board in the State ?

உலக வங்கியிடமிருந்து நிதி உதவி

திரு. வி. வெங்கா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில் குடிசை மாற்று வாரியத்திற்காக உலக வங்கியிடமிருந்து கேட்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : உலக வங்கியிடமிருந்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் எவ்வித உதவியும் கேட்கப்படவில்லே.

திரு. வி. வெங்கா : கேட்கவில்லேயா, கேட்டது கிடைக்கவில்லேயா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : கேட்கவில்லே.

திரு. வி. வெங்கா : மத்திய அரசு குடிசை மாற்று வாரியத்திற்கு இது வரை எவ்வளவு உதவி செய்திருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : குடிசை மாற்று வாரியத்திற்கென்று இல்லாமல், சுகாதார வசதிகளுக்காக இரண்டு ஆண்டுகளாக பணம் கொடுத்து, அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதன்பிறகு நம்முடைய மாநில சர்க்காரே அதனுடைய செலவுகளே ஏற்றுக்கொண்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS